# அரசாங்கத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களில்

# சம்மதம் அளித்தல்

## குறித்த வழிகாட்டி

**பதிப்பு 0.2**
**(24 ஜூலை2025)**



நீங்களும் உங்கள் குடும்பத்தினரும், சேவைகள், உதவிகள், நிதி உதவிகள் அல்லது சலுகைகள் பெறுவதற்காகச் செய்யும் விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக, அரசாங்கத் திட்டங்களுக்கு அளிக்கும் சம்மதம் தொடர்பிலான வழிகாட்டியாக இந்த கையேடு அமைகிறது.

## என் விண்ணப்பத்திற்கு நான் ஏன் சம்மதம் அளிக்கவேண்டும்?

அரசாங்க அமைப்புகளிடமிருந்து உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெறுவதற்க்கு அரசாங்கத் திட்டங்கள் உங்கள் சம்மதத்தைக் கேட்கின்றன. உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலித்து, திட்டத்திற்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா (பணவசதிச் சோதனை) என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நீங்கள் சம்மதம் அளிப்பதன்வழி, ஏற்கனவே அரசாங்கத்திடம் உள்ள தகவல்களுக்கான ஆதாரப் பத்திரங்களை (எ.கா. அடையாள அட்டையின் நகல், மத்திய சேமநிதி அறிக்கை) நீங்கள் தயார்ப்படுத்த வேண்டியதில்லை. மேற்கொண்டு உறுதிப்படுத்த வேண்டிய நிலைகளில் மட்டுமே ஆதாரப் பத்திரங்கள் தேவைப்படலாம். இதன்வழி, அரசாங்கத் திட்டங்கள் உங்கள் விண்ணப்பத்தை விரைவாகவும், தேவையான தகவல்களுடனும் பரிசீலிக்க முடியும்.

## பங்குபெறும் திட்டங்கள் எனது தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு பயன்படுத்தும்?

அரசாங்கத் திட்டங்கள் உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெறவும், நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் திட்டத்திற்குத் தகுதி பெறுகிறீர்களா என்பதைப் பரிசீலிக்கவும் உங்களின் சம்மதம் துணைபுரியும். திட்டங்களை மேம்படுத்துவதற்காக மற்றும்/அல்லது புதிய சமூகச் சேவைகளை அல்லது பொது உதவித் திட்டங்களை உருவாக்குவதற்காக, உங்கள் தகவல்கள் பகுப்பாய்வுக்கும் மதிப்பாய்வுக்கும் பயன்படுத்தப்படலாம். இதுபற்றிய மேல்விவரங்களைச் சம்மதமளிக்கும் படிவத்திலுள்ள விதிமுறைகளில் பார்த்தறியலாம்.

## திட்டத்திற்கான விண்ணப்பத்தில் யார் சம்மதம் அளிக்கலாம்? என் குடும்ப உறுப்பினர்களுக்காக நான் சம்மதம் அளிக்கலாமா?

ஒருவரின் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதற்குமுன், அவரிடம் தெரியப்படுத்துவதும், சம்மதம் பெறுவதும் அவசியம். சம்மதம் அளிக்க கையொப்பமிடும்போது, பிறந்த தேதியின் அடிப்படையில் குறைந்தது 21 வயதை எட்டியவர்களும், சம்மதம் அளிபப்தற்கான விதிமுறைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய மனநல ஆற்றல் உடையவர்களும், சொந்தமாகச் சம்மதம் அளிக்கலாம். சொந்தமாகச் சம்மதம் அளிக்க இயலாத பின்வரும் பிரிவினருக்கு (விதிவிலக்குகள்), அவர்களின் சார்பில் அவர்களது அதிகாரம்பெற்ற பிரதிநிதி(கள்) சம்மதம் அளிக்கலாம்:



| விதிவிலக்குகள் | | அதிகாரம் பெற்ற பிரதிநிதி(கள்) |
|---|---|---|
| a) | சம்மதமளிக்கும் படிவத்தில் கையொப்பம் இடும்போது, பிறந்த தேதியின் அடிப்படையில் வயது வராதவர் (அதாவது 21 வயதை அடையாதவர்) | • வயது வராதவரின் சொந்த/ தத்தெடுத்த பெற்றோர் மற்றும்/அல்லது<br>• வயது வராதவரின் சட்டபூர்வ காப்பாளர் |
| b) | மனநல ஆற்றலின்மை (சிங்கப்பூரில் பதிவு செய்த மருத்துவர் சான்றளிக்கவேண்டும்) | • பதிவு செய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரத்தின்கீழ் இடம்பெறும் டோனீ*<br>• மனநல ஆற்றல் சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற பிரதிநிதி. |
| c) | காலமானவர் | • சொத்துகளை நிர்வகிக்க அதிகாரம் பெற்றவர் |

* டோனீ அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதி, மனநல ஆற்றல் இல்லாதவரின் சார்பில் கூட்டாக மட்டுமே செயல்படவேண்டுமென நியமிக்கப்பட்டிருந்தால், டோனீ, பிரதிநிதி அனைவரும் கூட்டாக அவரது சார்பில் சம்மதம் அளிக்கவேண்டும்.

## என் குடும்ப உறுப்பினர்களால் சம்மதமளிக்கும் படிவத்தில் கையொப்பமிட இயலாவிட்டால் நான் என்ன செய்வது? என் குடும்ப உறுப்பினர்களின் சார்பாக நான் கையொப்பமிடலாமா?

ஒரு தனிநபரின் தனிப்பட்ட தகவல்களை அவரின் சம்மதத்துடன் மட்டுமே பயன்படுத்தப்படுவது முக்கியம். அவர் குறைந்தபட்சம் 21 வயதுடையவராக இருந்தால் மற்றும் ஒப்புதல் விதிமுறைகளைப் புரிந்துகொள்ளும் மன திறன் இருந்தால், அவர் தானாகவே சம்மதம் அளிக்க வேண்டும்.

உங்கள் விண்ணப்பத்தில் இடம்பெற்றுள்ள ஒரு குடும்ப உறுப்பினரால் அவரது தனிப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கு அரசாங்கத் திட்டத்திற்குச் சம்மதம் அளிக்க இயலாவிட்டால் (எ.கா. வெளியூரில் இருக்கிறார், அதிகாரம் பெற்ற பிரதிநிதி கிடையாது), உங்கள் விண்ணப்பத்தை எவ்வாறு பரிசீலிப்பது என்பதன் தொடர்பில் கலந்துபேச அரசாங்கத் திட்டத்திடம் தெரியப்படுத்தவும்.

## இவ்வாண்டு 21 வயதை எட்டும் என் பிள்ளை தனக்காகச் சம்மதம் அளிக்கலாமா?

தனக்காகச் சம்மதம் அளிக்க, உங்கள் பிள்ளை படிவத்தில் கையொப்பமிடும்போது, அவரது பிறந்த தேதியின் அடிப்படையில் குறைந்தது 21 வயதை எட்டியிருக்கவேண்டும். இல்லாவிட்டால், அவரது

சொந்த/தத்தெடுத்த பெற்றோர் அல்லது சட்டபூர்வ காப்பாளர் (இருந்தால்) அவரது சார்பில் சம்மதம் அளிக்கவேண்டும். அவரது தனிப்பட்ட தகவல்கள் அவரது சம்மதத்துடன் மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவது இதன் நோக்கம்.

## நான் சம்மதம் அளிப்பதற்கு எந்த வகையான தெரிவுகள் உள்ளது?

உங்கள் விண்ணப்பத்தின் ஒரு பகுதியாகச் சம்மதம் அளிக்கும்போது, நீங்கள் பின்வரும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தெரிவுகளை தேர்ந்தெடுக்கலாம்:

### எல்லா திட்டங்களும்

இந்தத் தெரிவுடன், எல்லா பங்*கேற்க்கும்** திட்டங்களும் உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெற்று, நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தினர் திட்டங்களுக்குத் தகுதி பெறுகிறீர்களா என்பதைப் பரிசீலிக்கமுடியும். அதோடு, நீங்கள் ஏற்கனவே அளித்த சம்மதம் நடப்பில் இருந்தால், மற்ற பங்குபெறும் திட்டங்களும், நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தினர் பிற்பாடு செய்யும் விண்ணப்பங்களையும் பரிசீலிக்க முடியும். உங்கள் தகவல்கள் தேவைப்படும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு திட்டத்திற்கும் சம்மதம் அளிக்கவேண்டிய சிரமத்தை இது குறைக்கும்.

### குறிப்பிட்ட நிறுவனம்

நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தார் விண்ணப்பம் செய்யும் திட்டம்(கள்) தகுதியை மதிப்பிடுவதற்கு உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுக நீங்கள் குறிப்பிட்ட திட்டம்(கள்) மட்டுமே உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெற இயலும். பிற நிறுவனங்களிலிருந்து பங்கேற்கும் திட்டங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களை பெற முடியாது. நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தினரும் பிற நிறுவனத்தின் திட்டங்களுக்கு விண்ணப்பித்தால், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் மீண்டும் தேவையான *சம்மதத்தை* வழங்க வேண்டும்.

### ஒற்றைத்-திட்டம்

நீங்கள் குறிப்பிடும் திட்டம்(கள்) மட்டுமே (எ.கா. தற்போதைய திட்டம்(கள்) அல்லது நீங்கள் விண்ணப்பம் செய்யும் திட்டங்கள்), உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெற இயலும். நீங்கள் அளிக்கும் சம்மதம் தற்போதைய விண்ணப்பத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். அடுத்தடுத்து புதுப்பிக்கும் திட்டங்களுக்கு அல்லது மறு விண்ணப்பங்களுக்கு இந்தச் சம்மதம் செல்லுபடியாகாது. பங்குபெறும் மற்ற திட்டங்களால்* அல்லது *அதே நிறுவனத்தி*லால்உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெற இயலாது. நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தார் மற்ற திட்டங்களுக்கு விண்ணப்பம் செய்தால், மறுபடியும் சம்மதம் அளிக்கவேண்டும்.

** பணவசதிச் சோதனை செய்வதற்கு அரசாங்க அமைப்புகள் பயன்படுத்தும் குடும்ப வருமானத் தகுதிக் கணிப்பு முறையில் இடம்பெறும் திட்டங்களைக் குறிக்கிறது. நீங்கள் HOMES webpage இணையத்தளத்தில் முழு பங்கேற்கும் திட்டங்களின் பட்டியலைக் காணலாம்.*



## நான் முன்னதாக சில திட்டங்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு மட்டுமே சம்மதம் அளித்திருந்தால், இப்போது எல்லா திட்டங்களுக்கும் சம்மதம் அளிக்கலாமா?

முடியும். நீங்கள் முன்னதாக சில திட்டங்களுக்கு அல்லது நிறுவனங்களுக்குமட்டுமே சம்மதம் அளித்திருந்தால், இப்போது எல்லா திட்டங்களுக்கும் சம்மதம் அளிக்கலாம். தயவுசெய்து அரசாங்கத் திட்டத்தை அணுகி, சம்மதமளிக்கும் படிவத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## என் குடும்ப உறுப்பினருக்குப் படிக்கத் தெரியாவிட்டால் அல்லது நிபந்தனைகள் புரியாவிட்டால் என்ன செய்வது?

தயவுசெய்து அரசாங்கத் திட்டத்தை அணுகி, ஆங்கிலம், சீனம், மலாய் அல்லது தமிழ் மொழியில் நிபந்தனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். மாறாக, நிபந்தனைகளைப் புரிந்துகொள்ள உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தாருக்கு உதவி தேவைப்படுவதாகத் தெரியப்படுத்துங்கள்.

## நான் பரிவர்த்தனை முறையில், அதாவது ஒருமுறை மட்டும், சம்மதம் அளிக்கலாமா?

இந்தத் தெரிவு தற்போது ஆதரிக்கப்படவில்லை. பங்குபெறும் திட்டங்களைப் புதுப்பிக்கும்போது அல்லது மறுவிண்ணப்பம் செய்யும் போது உங்களுக்கும் குடும்பத்தாருக்கும் ஏற்படக்கூடிய சிரமத்தைக் குறைப்பதற்காக, பங்கேற்கும் திட்டங்களின் விண்ணப்பத்திற்கு நீங்கள் வழங்கிய சம்மதம் மீட்டுக் கொள்ளப்படும்வரை தொடர்ந்து நடப்பிலிருக்கும்.

## நான் சம்மதம் அளிக்காமல், திட்டத்திற்குத் தேவையான ஆதாரப் பத்திரங்களை நானே கொடுக்கலாமா?

சம்மதம் அளிக்காதிருப்பது உங்கள் உரிமை. உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு அல்லது நீங்கள் தகுதிபெறுகிறீர்களா என்பதை மதிப்பிடுவதற்கு, அரசாங்கத் திட்டத்தால் உங்களது சம்மதமின்றி அரசாங்க அமைப்புகளிடமிருந்து உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெற இயலாது. உங்கள் விண்ணப்பத்தை எவ்வாறு பரிசீலிப்பது என்பது பற்றி கலந்துபேச, தயவுசெய்து அரசாங்கத் திட்டத்தை அணுகவும்.

## நான் சம்மதம் அளித்த பிறகு மீட்டுக்கொள்ள முடியுமா?

முடியும். நீங்கள் சம்மதத்தை மீட்டுக்கொள்ள விரும்பினால், தயவுசெய்து அரசாங்கத் திட்டத்தை அணுகி உதவி பெறுங்கள். உங்கள் சம்மதத்தை மீட்டுக்கொண்ட பிறகு, எல்லா பங்கேற்க்கும்* திட்டங்களும் அரசாங்க அமைப்புகளிடமுள்ள உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்த இயலாது.



நீங்கள் சம்மதத்தை மீட்டுக்கொண்ட பிறகு, உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கிடைக்கும் நிதி உதவிகள் அல்லது சேவைகள் பாதிக்கப்படலாம். ஏனெனில், உங்களை மதிப்பிடுவதற்கு அல்லது உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்திற்கு அனுகூலங்களை வழங்குவதற்கு உங்களது தனிப்பட்ட தகவல்கள் திட்டத்திற்குத் தேவைப்படலாம். இந்நிலையில், மறுபடியும் சம்மதம் அளிக்குமாறு உங்களிடம் கேட்டுக் கொள்ளப்படலாம்.

நீங்கள் சம்மதத்தை மீட்டுக்கொள்வதால், சட்ட அனுமதியுடன் அல்லது சட்டத்தின் தேவைப்படி, அல்லது பொதுநலன் கருதி, உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பெறவும், பகிரவும், பயன்படுத்தவும் அரசாங்க மற்றும் பங்குபெறும் அமைப்புகளுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

** பணவசதிச் சோதனை செய்வதற்கு அரசாங்க அமைப்புகள் பயன்படுத்தும் குடும்ப வருமானத் தகுதிக் கணிப்பு முறையில் இடம்பெறும் திட்டங்களைக் குறிக்கிறது. நீங்கள் HOMES webpage இணையத்தளத்தில் முழு பங்கேற்கும் திட்டங்களின் பட்டியலைக் காணலாம்.*

## எனது தனிப்பட்ட தகவல்கள் அதிகாரமின்றி பெறப்படாமல், தவறாகப் பயன்படுத்தப்படாமல் அல்லது அத்துமீறப்படாமல் பாதுகாக்க என்னென்ன நடவடிக்கைகள் நடப்பிலுள்ளன?

உங்களது தனிப்பட்ட தகவல்கள் அதிகாரபூர்வ பயன்பாட்டுக்கு, தேவையின் அடிப்படையில், திட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட பயன்பாட்டாளர்கள் மட்டுமே பெறப்படும். இந்தப் பயன்பாட்டாளர்கள், ஆளுமை மற்றும் சட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதாக உறுதியளிக்கும் படிவத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

எல்லா பயன்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்படுகின்றன. வழக்கத்திற்கு மாறான செயல்பாடுகளை அல்லது தனிப்பட்ட தகவல்களின் அதிகாரமற்ற பயன்பாடுகளைக் கண்டறிய அல்லது விசாரணை செய்ய, பயன்பாட்டாளர்கள் அடிக்கடி பரிசீலிக்கப்படுவதோடு, தணிக்கைகளும் நடத்தப்படுகின்றன.

அதிகாரமின்றி தகவல் பெறுவதை, தவறாகப் பயன்படுத்துவதை, அல்லது ரகசியத்தன்மையை மீறுவதைக் கடுமையான கண்ணோட்டத்துடன் அரசாங்கம் கையாளும்.

சம்மதம் அளித்தல் பற்றி உங்களுக்கு வேறு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து HOMES இணையத்தளத்திலுள்ள கேள்விப் படிவத்தைப் பயன்படுத்தி எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

(URL:https://go.gov.sg/homes-feedback).